


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருதினை முதல்வர் அவர்கள் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன் அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்வு

# பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீனுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!



சென்னை, அக் 6 – இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கு முதலமைச்சரும் – கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், தனது சமூக வலைதளப் பக்கத்தில் வாழ்த்துத் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழ்ந்த கல்விப்புலமையும், நெடிய அனுபவமும் கொண்ட அவரது அரசியல் பணி மேலும் சிறக்கவும்; வெற்றிகள் பெறவும் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### சொத்துவரியை

## அக். 30க்குள் செலுத்த வேண்டும்!

சென்னை, அக். 6 –

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்து உரிமையாளர்கள் முதல் அரையாண்டுக்கான சொத்து வரியினை ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரையிலும், இரண்டாம் அரையாண்டுக்கான சொத்துவரியினை அக்டோபர் 1 முதல் மார்ச் 31 வரையிலும் செலுத்த வேண்டும்.

மேலும், முதல் அரையாண்டு சொத்துவரியினை ஏப்ரல் 30ஆம் தேதிக்குள்ளாகவும், இரண்டாம் அரையாண்டு சொத்துவரியினை அக்டோபர் 30ஆம் தேதிக்குள்ளாகவும் செலுத்தும் சொத்து உரிமையாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 5 சதவீத ஊக்கத்தொகை அதிகபட்சம் ரூ.5 ஆயிரம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சொத்து உரிமையாளர்கள் இரண்டாம் அரையாண்டுக்கான சொத்துவரியினை அக்டோபர் மாதம் 30ஆம் தேதிக்குள் செலுத்தி, 5 சதவீத ஊக்கத்தொகை அதிகபட்சம் ரூ.5 ஆயிரம் வரை பெற்று பயனடையுமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.





